**O.S.No. 252/2013**

**PW 1:** பிரகஜாம்பாள் தேதி 25.11.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 26 மற்றும் 27 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து என் தாத்தா வழி பூர்வீக சொத்து. என் தாயார் பெயரில் ஆவணங்கள் எதுவும் இல்லை. யார் யார் மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் பிரதிவாதிகள் யார் யார் என்று சொல்ல இயலாது. என் தாயார் தாக்கல் செய்த வழக்கு என்பதால் வாரிசு அடிப்படையில் தொடர்ந்து நடத்துகிறேன். சொத்துக்கு சம்மந்தப்பட்டவர்களை தான் தரப்பினர்களாக சேர்த்து இருக்கிறேன். திருஞானம் மற்றும் சோமசுந்தரம் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் சொத்து அவர்களுக்கு சொந்தம் என்று சொல்கிறார்கள். அவர்கள் தாக்கல் செய்த பத்திரங்களை பார்த்தீரா என்றால் பார்த்தேன். அவர்கள் நாராயணா அன்டு சன்ஸ் என்ற பெயரில் சர்வீஸ் நடத்தினார்கள். தாவா C அட்டவணையில் அயிட்டம் 2 ல் TS No.2 ல் சர்வீஸ் ஸ்டேசன் நடத்தினார்கள். அந்த சொத்துகளுக்கு என் பெயருக்கு ஆவணம் எதுவும் இல்லை என் அம்மா பெயரில் தான் இருந்தது. என் அம்மா பெயரில் என்ன ஆவணங்கள் உள்ளது அதை அனுபவிக்க ஆவணம் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா C அட்டவணையில் அயிட்டம் 2 ல் எனக்கு உரிமை இல்லை என்றும் 26 மற்றும் 27 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்பதால் நான் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. TS No.3 ல் நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றும் எனக்கு பாகம் எதுவும் இல்லை என்றால்

சரியல்ல. மேற்படி சொத்தை பொறுத்தவரை எனக்கு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.